
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 29 செவ்வாய் 14.09.2021 மலர் - 2, இதழ் - 161

# நீட் தற்கொலைகள்




தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த தி.மு.க, நீட் தேர்வை நீக்க முடியாது என தெரிந்திருந்தும், நீட்டை ஒழிக்கும் ரகசியம் எங்களுக்கு தெரியும், ஆட்சிக்கு வந்தால் நீட்டை ஒழிப்போம் என்ற பொய் வாக்குறுதியால், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை தவறாக வழிநடத்தினர். அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, கண்டிப்பாக நீட் தேர்வை எழுத வேண்டும் அதற்கு தயாராகவும் என்று கூறாமல், முயற்சிக்கிறோம், நல்ல முடிவு கிடைக்கும் என்று வறட்டு வாதம் புரிந்தனர்.

நீட் தேர்வை ஏற்கனவே இரண்டு முறை எழுதி தோல்வியடைந்து, மூன்றாம் முறையாக தேர்வெழுத பயந்த சேலம் மாவட்டம் கூழையூர் கிராமத்தை தனுஷ் என்ற மாணவன் தற்கொலை செய்து கொண்டார். ஏற்கனவே இரண்டாண்டுகளுக்கு முன்பு மாணவி அனிதாவையும் இதேபோல, கடைசிவரை உச்ச நீதிமன்றம்வரை கொண்டுசென்று, தவறாக வழிநடத்தி அவரின் சாவுக்கு காரணமானது தி.மு.க.

அன்று மாணவியின் சாவை அரசியலாக்கி, ஆதாயம் தேடிய தி.மு.க, தற்போது அதனை சாதாரணமாக கடந்து செல்ல முயல்கிறது. அவர்களின் பேச்சு, ஆட்சியில் இருக்கும்போது ஒன்றாகவும், எதிர் கட்சியானபோது வேறாகவும் உள்ளது. அ.தி.மு.கவும், தி.மு.க செய்த அதே அனுதாப அரசியலை இன்று கையிலெடுக்கிறது. ஒரு மாணவரின் சாவை அரசியலாக்கும் திராவிட கட்சிகள், ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என நிருபிக்கின்றன. தற்கொலையை தூண்டும் விதமாக லட்சக்கணக்கில் பணம் தந்து, தவறான முன்னுதாரணம் நிகழ்த்தப்படுகிறது.

அனைத்து போட்டி தேர்வுகளுமே மாணவர்களுக்கு பயம் ஏற்படுத்தத்தான் செய்யும். 10வது, 12வது ஆண்டுத் தேர்வு முடிவுகள் வெளியானதும், தோல்வி, மதிப்பெண் குறைவுகளால் ஒவ்வோர் ஆண்டும் இருபதுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். அதற்காக அத்தேர்வுகளை நடத்தாமல் இருக்க முடியுமா? மாணவர்களின் பயத்தை போக்க, போட்டி தேர்வுகளை எதிர்கொள்ள தேவையான பயிற்சிகளை அரசு வழங்க வேண்டும்.

பெற்றோர்களும் தங்களின் குழந்தைகளின் நிலை அறிந்து செயல்பட வேண்டும். தங்கள் ஆசையை செயல்படுத்தும் இயந்திரமாக அவர்களைக் கருதக்கூடாது. அதை கற்க வேண்டும், இதை கற்க வேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது. பிள்ளைகள் முயற்சித்தும்தோல்வியடைந்தால்அதற்குஇணையானஎத்தனையோ படிப்புகள் உள்ளது, அதனை கற்றுத் தேற உற்சாகப்படுத்த வேண்டும்.

மாணவர்களும் தோல்வியும் வாழ்க்கையின் ஒரு அங்கமே என்பதை உணர வேண்டும், தோல்வியில் துவளாமலும் வெற்றியில் குதிக்காமலும் இருக்க வேண்டும். அதுவே, வாழ்க்கையில் இன்பம் துன்பம் இகழ்ச்சி புகழ்ச்சி அவமானம் என அனைத்தையும் சரிசமமாக ஏற்று வாழ்வில் முன்னேற வழிவகை செய்யும்.

# கோயில் நிலத்தில் கை வைத்தால் கைது




தமிழகத்தில் கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள் மீது உரிமையியல் வழக்குகள் மட்டுமே போட முடியும். கைது செய்ய முடியாது. இந்த தைரியத்தால் கோயில் நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுகின்றன. இந்நிலையில், கோயில் நிலங்களை ஆக்கிரத்தால் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக சட்ட மசோதா நேற்று தமிழக சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி, ஹிந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்கள் கடும் குற்றம் செய்தவர்களாக கருதப்பட்டு ஜாமினில் விட முடியாத சட்டப்பிரிவுகளின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்று சட்டமசோதா தெரிவிக்கிறது.

# வீடு தோறும் குடிநீர் திட்டம்



ஜல் சக்திக்கான மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், ஜல் ஜீவன் மிஷனின் கீழ், 2024க்குள் நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு இருப்பதை உறுதி செய்ய பிரதமர் மோடி தலைமையிலான அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. தற்போதுவரை ஐந்து கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இது விரைவில் 8 கோடியை தாண்டும். தற்போது, 1,10,000 கிராமங்களில் 100 சதவீதம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புள் வழங்கப்பட்டுள்ளன. தெலுங்கானா, குஜராத், பஞ்சாப், உத்தரகண்ட், மகாராஷ்டிரா, ஹிமாச்சலப் பிரதேசம் ஆகியவை ஜல் ஜீவன் மிஷனின் கீழ் 80 முதல் 100 சதவிகிதம் வரை இலக்குகளை அடைந்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக, சில மாநிலங்கள் பின்தங்கியுள்ளன' என்று கூறினார்.

# காங்கிரசின் புதிய லாஜிக்

குஜராத் மாநில புதிய முதல்வராக பூபேந்திர பட்டேல் பதவியேற்றார். இந்நிலையில், 'குஜராத் மாநில முதல்வராக அவர் பதவியேற்றது அவமானம், இது குஜராத் மக்களை அவமானப்படுத்தும் செயல்.

அவருக்கு 14 ஆயிரம் டுவிட்டர் பின்தொடர்பவர்கள் மட்டுமே உள்ளனர்' என காங்கிரஸ் கட்சியின் மத்தியப் பிரதேச பிரிவு தனது டுவிட்டர் தளத்தில் செய்தி பதிவிட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியில் இந்த வினோதமான கருத்து, சமூக ஊடகங்களில் பரவலாக கேலி செய்யப்பட்டது. இந்த டுவிட்டர் பதிவு காங்கிரசின் மிகக் குறைந்த ஐ.க்யூவுக்காக உலக சாதனையை படைத்துள்ளது.

இந்த டுவிட்டர் ஒருவேளை ராகுல் காந்தியின் நேரடி கண்காணிப்பில் இருக்கிறதோ என சமூக ஊடக பயனாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். பூபேந்திர படேல் குஜராத்தில் உள்ள கட்லோடியா சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சசிகாந்த் படேலை எதிர்த்து 1,17,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னைக்கு மாற்ற எதிர்ப்பு



கோவையில் இயங்கிவரும் விதைச் சான்று மற்றும் அங்கக சான்றிதழ் வழங்கும் துறையின் தலைமை இடத்தை சென்னைக்கு மாற்றுவதாக வேளாண்மைத் துறை அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறது. விவசாயிகளிடம் எந்த கருத்தையும் கேட்காமல், அவர்களுக்கு இத்திட்டம் உதவுமா என யோசிக்காமல் தங்கள் நிர்வாக வசதிக்காக இதனை செயல்படுத்த தீவிரம் காட்டுகிறது தமிழக அரசு. இதற்கு பல்வேறு விவசாய அமைப்புகள் தமிழக அரசின் இந்த முயற்சிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அவ்வகையில், தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் தலைவர் பழனிச்சாமி தலைமையில் விவசாயிகள் விதைகளுடன் வந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கினார். இம்மனுவில் இச்சான்று வழங்கும் தலைமை இடத்தை சென்னைக்கு மாற்றினால் கொங்கு மண்டலத்தில் இயற்கை விவசாயம் முடக்கப்படும். விவசாயிகள் போக்குவரத்து உட்பட பல்வேறு சிக்கல்களை சந்திப்பார்கள், நேர விரயம் நேரிடும் என்பதால் இந்நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டது.

# தேசிய உளவு தொகுப்பு அமைப்பு

மும்பையில் 2008ல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, நமது நாட்டில் உள்ள பல்வேறு உளவு நிறுவனங்கள் தங்கள் உளவுத்தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காக 'நேட்கிரிட்' அமைப்பை உருவாக்க 2010ல் முடிவு செய்யப்பட்டது.

பல காலமாக, பல்வேறு காரணங்களால் செயல்படுத்தப்படாமல் இருந்த இந்த யோசனை, தற்போது பல கட்ட ஆய்வுகள், முயற்சிகளுக்குப் பிறகு செயல்பாட்டுக்கு வரவுள்ளது. சி.பி.ஐ., வருவாய் புலனாய்வுத்துறை, அமலாக்கத் துறை, மத்திய நேரடி வரிகள் ஆனையம், கேபினட் செயலகம், ஜி.எஸ்.டி., கண்காணிப்பு அமைப்பு, போதைப் பொருள் தடுப்பு அமைப்பு, தேசிய புலனாய்வு அமைப்பு, ஐ.பி, கியு, ரா உள்ளிட்ட பல்வேறு உளவு, கண்காணிப்பு அமைப்புகள் இதில் இடம்பெறும். முதல் கட்டமாக 10 உளவு அமைப்புகளும், 21 சேவை அமைப்புகளும் நேட்கிரிட்டில் இணைக்கப்படும்.




இதனை செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்புகளும் செய்யப்பட்டு வருகின்றன.

# தலைமையை நம்பாத வீரப்ப மொய்லி



காங்கிரஸ் கட்சியின் மூத்த அதிருப்தித் தலைவர்கள் 23 பேர், கட்சி கட்டமைப்பை முழுமையாக மாற்றி அமைக்குமாறு சோனியாவுக்கு கடிதம் எழுதினர். ஜி23 என அழைக்கப்படும் அந்த 23 பேரில் வீரப்ப மொய்லியும் ஒருவர். அதன் பின் அங்கிருந்து விலகிய அவர் சோனியாவுக்கு ஆதரவாக செயல்படுகிறார். சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வீரப்ப மொய்லி, தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர், பல மாநிலங்களில் வெற்றிகரமாக செயல்பட்டுள்ளார். அவர் கட்சிக்கு வெளியில் இருந்து சீர்திருத்தங்களை செய்வதற்கு பதிலாக, கட்சிக்குள் இருந்து செயல்பட வேண்டும். காங்கிரசுக்கு தலைமை தாங்க ராகுல்காந்தி பொருத்தமானவர்.

இருப்பினும், கட்சியை சீரமைப்பதுதான் இப்போது முக்கியம். பிரசாத் கிஷோரால் மட்டுமே காங்கிரஸ் கட்சிக்கு எழுச்சியை தரமுடியும் என கூறியிருந்தார். அவரின் இக்கருத்து அவர் ராகுலையும் சோனியாவையும் உள்ளூர நம்பவில்லை என்பதையே மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறது என இணையதளவாசிகள் கூறுகின்றனர்.

# பழங்குடியினர் வளர்ச்சி

அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சர் அர்ஜுன் முண்டா ஆகியோர், பழங்குடியினர் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்ட மீளாய்வு கூட்டத்தில் பங்கேற்றனர்.

அக்கூட்டத்தில், 'அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான பிரதமரின் தொலைநோக்கு திட்டத்துடன், பழங்குடி சமூகங்களின் வளர்ச்சிக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை எடுத்துள்ளது. 400 புதிய வன் தன் விகாஸ் மையங்களை (VDVK) நிறுவுவது, ஐந்து பழங்குடி உணவு பூங்காக்கள், 7 ஏகலவ்யா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள் அமைப்பது உள்ளிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது' என அசாம் முதல்வர் தெரிவித்தார்.

'பழங்குடி மக்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு தேவையானவற்றை செய்யும், பழங்குடி இளைஞர்களின் வேலைவாய்ப்பு, தொழில்முனைவுக்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன' என்று அர்ஜுன் முண்டா கூறினார்.



# திருப்பதி தேவஸ்தானம் ஊதுபத்தி விற்பனை



திருமலை திருப்பதி தேவஸ்தானம் தனக்கு சொந்தமாக இருக்கும் கோயில்களில் சாமிக்கு பயன்படுத்தப்படும் மலர்களை காயவைத்து பதப்படுத்தி அரைத்து ஊதுபத்திகளை தயார்செய்து பக்தர்களிடம் விற்பனை செய்ய முடிவு செய்தது. இவை இயற்கையை காக்கவும், மலர்கள் குப்பைகளாக வீணாவதை தடுக்கவும் உதவும். அதன்படி, நேற்று முதல் திருமலை, திருப்பதி, திருச்சானூர் ஆகிய ஆலயங்களில் அந்த ஊதுபத்திகள் விற்பனையை தேவஸ்தானம் துவக்கியது. தந்தனானா, திவ்யபாதா, துஷ்த்தி, துருஷ்ததி, அபயஹஷ்தா, சிருஷ்த்தி, ஆக்குருஷ்த்தி ஆகிய 7 பிராண்டுகளில் தினமும் மூன்றரை லட்சம் ஊதுபத்திகளை தயாரித்து தேவஸ்தான நிர்வாகம் பக்தர்களிடையே விற்பனை செய்யும். இவை ரூ. 45, ரூ. 85 ஆகிய விலைகளில் விற்பனை செய்யப்படும்.

# பயங்கரவாத இஸ்லாமிய சித்தாந்தம்

செப்டம்பர் 11, 2001ல், அமெரிக்காவில் அல்கய்தா நிகழ்த்திய நான்கு பயங்கரவாதத் தாக்குதல்கள் உலகையே அதிர்ச்சி அடைய வைத்தன. உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்டது, அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது. இதில் பலர் கொல்லப்பட்டனர். இந்த சோக நிகழ்வின் நினைவு நாளை முன்னிட்டு, அமெரிக்காவின் ஜனநாயக கட்சியை சேர்ந்த துளசி கபார்ட் தனது டுவிட்டர் பதிவில், '9/11 அன்று அமெரிக்காவிற்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல்களையும் போர் அறிவிப்பையும் ஊக்குவித்தது இஸ்லாமிய சித்தாந்தம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இஸ்லாமிய சித்தாந்தம்தான் உலகெங்கிலும் உள்ள பயங்கரவாத தாக்குதல்களைத் தூண்டுகிறது. முஸ்லிம் நாடுகள் என கூறப்படும் 'பாகிஸ்தான், துருக்கி, ஈரான், சௌதி அரேபியா போன்ற நாடுகள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள், பௌத்தர்கள், நாத்திகர்கள் போன்றவர்களுக்கு எதிரான பாகுபாடான கொள்கைகளை கொண்டுள்ளது' என பதிவிட்டுள்ளார்.

# சமூக ஊடகங்களின் சார்பு நிலை



சமூக ஊடக நிறுவனமான டுவிட்டர், பாரதத்தில் நிறைய சிக்கல்களை உருவாக்கி வருகிறது. சில சிக்கல்களை சந்திக்கவும் செய்கிறது. பாரத குடியரசுத் துணைத் தலைவர் கணக்கில் நீல நிறக் குறியை அகற்றியது, மத்திய தகவல் ஒளிபரப்புத்துறை சட்டங்களை மதிக்காமல் செயல்பட்டது, டெல்லி காவல்துறையின் விசாரணைகளுக்கு முரட்டுத்தனமாக பதிலளித்தது, உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காதது என சொல்லிக்கொண்டே போகலாம். அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்பின் பதிவுகளுக்கும்கூட தடை விதித்தது டுவிட்டர். பயங்கரவாத அமைப்புகள், வன்முறை குழுக்கள் உள்ளிட்டோருக்கு டுவிட்டரில் இடமில்லை என கூறும் அந்நிறுவனம், பயங்கரவாதிகள் என தெரிந்திருந்தும் தலிபான் தலைவர்களின் கணக்கை இன்றுவரை முடக்கவில்லை. அவர்களிடம் மென்மையான போக்கை கடைபிடிக்கிறது.

# பஞ்ஜஷீரில் வெகுஜன படுகொலை



தலிபான்கள் ஆப்கனின் பஞ்ஜஷீர் பகுதியை கைப்பற்றிய பிறகு, பஞ்ஜஷீர் பள்ளத்தாக்கில் உள்ள வடக்கு கூட்டணி தலைவர்களின் குடும்ப உறுப்பினர்கள், எதிர்ப்புப் படையினர், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரையும் கூட்டம் கூட்டமாக கொன்று வருகின்றனர். கிராமங்களுக்குள் நுழைந்து அங்கு கண்ணில் படுபவர்களை எல்லாம் சித்திரவதை செய்து கொல்கின்றனர். மறைந்த மார்ஷல் ஃபாஹிமின் மருமகனும், முன்னாள் ஆப்கன் ராணுவத் தளபதியுமான மோஜிர் ஹக்ஜோ உட்பட பல தலைவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் ஈவு இரக்கமின்றி தூக்கில் இடப்பட்டனர். குழந்தைகள், பெண்கள் உட்பட பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு, ராணுவ கவச வாகன்ங்களை ஏற்றி கொல்லுதல், அவர்கள் தலைகளை வெட்டி நகரின் முக்கிய இடங்களில் வைத்தல், உடல்களை ஆற்றில் கொட்டுதல், பல ஆண்களை சில ரகசிய இடங்களுக்கு அழைத்து செல்லுதல் என பல கொடூர செயல்கலை செய்வதாக அங்கிருந்து வரும் சமூக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

# விட்டு சென்ற கவசங்கள் விற்பனைக்கு




ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கர்கள் வெளியேறும்போது ஏராளமான நவீன ராணுவ ஆயுதங்கள், வெடிபொருட்கள், விமானங்கள், பாதுகாப்பு கவசங்கள் உள்ளிட்டவற்றை அப்படியே விட்டு சென்றனர். இவை தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்நிலையில், பாகிஸ்தானை சேர்ந்த ஸ்பெக்டர் டிபென்ஸ் என்ற நிறுவனம் தனது இன்ஸ்டாகிராமில் அமெரிக்கர்கள் விட்டு சென்ற கவசங்களின் புகைப்படங்களை வெளியிட்டு அவற்றை விற்பனை செய்கிறது என பாகிஸ்தானிய பத்திரிகையாளர் ஹம்சா அசார் சலாம் குற்றம் சாட்டினார். அதற்கான சில ஆதார புகைப்படங்களையும் அவர் வெளியிட்டார்.

ஆனால், இந்த கூற்றை அந்த நிறுவனம் மறுத்துள்ளது. இவை தங்கள் தயாரிப்புதான் என கூறியுள்ளது. இச்செய்தியின் உண்மை பின்னணி குறித்து முழுதாகத் தெரியவில்லை என்றாலும் இது வருங்கால பேராபத்தை உணர்த்துவதாகவே உள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்

தான் வணங்கும் கடவுளை இல்லை
என்று சொல்பவனை
ஆளவைத்துவிட்டு

அவனிடம் கடவுளை வணங்க அனுமதி
கேட்டு நிற்கும்


அறிவாளி தமிழகம்.





விநாயகர் சதுர்த்திக்கு ஆரம்பித்த கொரொனா
அலை, அப்படியே ஆயுத பூஜை வரை இரு
ரவுண்ட் அடிச்சுட்டு, நபிகள் பிறந்தநாளுக்காக
பதுங்கி, மறுபடி தீபாவளிக்கு முழுவீச்சில் தன்
பயணத்தை தொடங்கி கிறுஸ்துமஸ்
சமயத்தில் வீழ்ச்சியடையும் என மருத்துவ
வல்லுனர்கள் கருத்து...

# உண்மையை வெளிப்படுத்திய ஹிந்துத்துவ எதிர்ப்பு மாநாடு



உலக அளவில் சமீபத்தில் பரபரப்பான ஒரு விஷயம் இடதுசாரி, லிபரல் எண்ணம் கொண்ட சில அமெரிக்க பல்கலைக் கழகங்கள் 'உலகலாவிய ஹிந்துத்துவாவை அகற்றுவோம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய ஒரு கருத்தரங்கு. இதற்கு எழுந்த கண்டனங்களால் சில கல்லூரிகள் இந்நிகழ்ச்சியில் இருந்து வெளியேறின. எனினும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஹிந்துத்துவாவை எதிர்த்து பேசிய லிபரல்கள், கம்யூனிச சிந்தனைவாதிகளின் பேச்சு, கடைசியில் ஹிந்துத்துவாவின் மேன்மையை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவதாகவே அமைந்துவிட்டது.

அக்கருத்தரங்கில் பேசப்பட்டவற்றில் சுருக்கமாக ஒரு சில:

முதலில் 'உலகலாவிய ஹிந்துத்துவாவை அகற்றுவோம்' என்ற தலைப்பே தவறு, ஹிந்துக்கள் உலகிற்கு என்றுமே எதிராக இருந்தது இல்லை, சர்வே ஜனா சுகினோ பவந்து, வசுதைவ குடும்பகம் என்பதே ஹிந்துக்களின் தாரக மந்திரம்.

'திருநங்கைகள், சம பாலீர்ப்புடையோர் உள்ளிட்ட சமூகத்தினர் (LGBTQ) ஹிந்து தேசியவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்' என்றனர் அவர்கள்.

இது நல்ல விஷயம்தானே, அனைவரையும் சமமாக, ஜாதி, மத, உடல், மொழி பேதமின்றி இறைவனின் படைப்பாக, ஒரே ஆன்மாவாக காண்பதுதானே ஹிந்து தர்மம். ஒரு மனிதனுடன் படுத்திருக்கும் மனிதன் நரகத்திற்குச் செல்வான் என்று எந்த ஹிந்து கடவுளும் சொல்லவில்லையே?

அடுத்ததாக, ஹிந்து தேசியம், பெண்களை சுதந்திரமாக இயங்க அனுமதிக்கிறது' என்றனர்.

இக்கருத்து பெண்கள் சுதந்திரமாக இருப்பதில் லிபரல்களும் இடதுசாரிகளும் மகிழ்ச்சியடையவில்லை என்பதையே காட்டுகிறது. மேலும், ஹிந்து தேசிய இயக்கத்தில் பெண்கள் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர் என்பதையும் உணர்த்துகிறது.

இம்மாநாட்டில் வழக்கம் போல பிராமண எதிர்ப்பு வாதம் இருந்தது. ஆனால் 'நடுத்தர வகுப்பினர் ஹிந்துத்துவத்தின் பங்காளிகள் ஆகிவிட்டனர்' என இதில் அவர்கள் குறிப்பிட்டனர்.

அவர்களின் இந்த முரண்பட்ட கருத்துகள், நடுத்தர வகுப்பினரில் உள்ள அனைத்து ஹிந்துக்களும் ஜாதி வேறுபாடு இன்றி ஹிந்துத்துவத்தை தெரிந்தோ தெரியாமலோ பின்பற்றி வருகின்றனர். அரசியல்வாதிகளின் பிராமண எதிர்ப்பு வாதம் மக்களிடம் எடுபடவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இம்மாநாட்டில் இப்படி பல விஷயங்கள் இடம் பெற்றன. ஹிந்துத்துவாவை எதிர்க்க போட்ட மாநாடு, ஹிந்துத்துவத்தின் மேன்மையை உலகிற்கு புரியவைப்பதாகவே அமைந்து விட்டது. அவர்களின் மனசாட்சிக்கு இது நன்றாக தெரியும், என்றாலும் 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்பதை போல, அவர்கள் இதனை ஒப்புக்கொள்ளப் போவதில்லை, தொடர்ந்து எதிர்க்கவே செய்வார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

சர்வே ஜனா சுகினோ பவந்து.

# உலக முதலுதவி தினம்



ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 14 'உலக முதலுதவி தினம்' என உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில், ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கும் பொழுது, அவருக்கு எந்த மாதிரியான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அதனுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தி மக்களிடம் பிரச்சாரம் செய்ப்படுகிறது.

முதலுதவி என்பது, உடல்நிலை சரியில்லாமல் அல்லது காயம்பட்டு என ஆபத்தான நிலையில் இருப்பவருக்கு விரைவாக மற்றும் சரியான முறையில் மருத்துவ உதவி அளிப்பது. ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவருக்கு, அவருடைய உயிரை காப்பாற்ற அப்பொழுது அவருக்கு என்ன கொடுக்க வேண்டும், என்ன கொடுக்கக்கூடாது என்பதை அறிந்து சமயோசிதமாக செயல்பட வேண்டும்.

பாரதத்தில் விபத்துக்களால் உயிர் இழப்பவர்களில் 80 சதவிகிதம் பேர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் ஒரு மணி நேரத்தில் பலியாகிறார்கள். இத்தகைய விபத்தில் சிக்கியவர்களுக்கு முறையான முதலுதவி கிடைத்திருந்தால், அவர்கள் நிச்சயம் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள். அந்த அளவுக்கு முதலுதவி என்பது தேவையானதாகவும், அவசியமாகவும் இருக்கின்றது. ஆபத்தான நிலையில் இருப்பவர்களை மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லும்முன், அவர்களுக்கு தேவையான அவசர சிகிச்சையே முதலுதவி எனப்படும்.

முதலுதவி செய்பவர் மருத்துவர்கள் வந்து அவருக்கு சிகிச்சை அளிக்கும்வரை அவருடன் இருந்து, முழு விபரத்தையும் தெரிவிக்க வேண்டும். முதலுதவி என்பது அந்த நேரத்தில் செய்யக்கூடிய தற்காலிகமான சிகிச்சை என்பதை நாம் உணர வேண்டும். அதை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் முதலுதவி கற்று அவசர காலத்தில் தேவைபடுபவர்களுக்கு அதனை செய்து உயிர் காக்க இந்நாளில் சபதமேற்போம்.

விபத்துகளின் பொழுது உங்களை நீங்களே சில மணி நேரம் காப்பற்றிக்கொள்ள முடியும். பிறருக்கும் அவசர காலங்களில் உதவவும் முடியும். அதற்குத் தனிப்பட எந்தக் கருவிகளும் தேவையில்லை. தேவையானதெல்லாம் நிதானமும் சமயோசித புத்தியும்தான். ஆபத்தின் பொழுது பீதியடையாமல் இருப்பது மிக முக்கியம். அது கடினம்தான். பயமும் பதட்டமும் நம்மைச் செயல்பட விடாமல் தடுத்துவிடும். 'ஒரு விபத்தில் சிக்கிக்கொண்ட பின் அதில் தப்பித்தவர்களுக்கும் தப்பிக்காமல் இறந்தவர்களுக்கும் உள்ள ஒரே வேறுபாடு என்னவெனில் தப்பிப்பவர்கள் தமது பயத்தை வெற்றிகொண்டு, நான் என்ன செய்யவேண்டும் என்று யோசித்து இறுதிவரை போராடுவதுதான்' என்கிறார் முதலுதவிகள் குறித்து வகுப்புகள் நடத்தும் ஒரு பிரபல நிபுணர்.

# ராம் பூல்சந்த் ஜெத்மலானி

பாரதத்தின் முன்னணி வழக்கறிஞரும், அரசியல்வாதியுமானவர் ராம் ஜெத்மலானி. இவர் பாரத சட்ட அமைச்சராகவும், பாரத வழக்கறிஞர் கழகத்தின் தலைவராகவும், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கழகத் தலைவராகவும் பணியாற்றினார். பல சர்ச்சைக்குரிய வழக்குகளில் பங்கேற்று விமர்சனங்களை எதிர்கொண்டார்.



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள சிக்கார்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெத்மலானி தனது 17வது வயதில் சட்டப் பட்டப்படிப்பை முடித்து, சிக்கார்பூரில் வழக்கறிஞராக பாரத பாகிஸ்தானிய பிரிவினை வரை பணியாற்றினார். 1947ல் பாரத பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட கலவரத்திலிருந்து தப்பிப் பிழைத்து மும்பைக்கு வந்தார். மும்பை உயர் நீதிமன்றத்திலும், கீழமை நீதிமன்றங்களிலும் வழக்கறிஞராக பணியாற்றினார்.

அடல் பிகாரி வாஜ்பாயின் முதலாவது அமைச்சரவையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர் வாஜ்பாயை எதிர்த்து 2004ல் லக்னோ மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். பின்னர் 2010ல் மீண்டும் பா.ஜ.கவில் இணைந்து மாநிலங்களவைக்கு நியமிக்கப்பட்டார். இவர் பல சட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

1988ல் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி மீது போஃபர்ஸ் பீரங்கி ஊழல் குற்றச்சாட்டு வந்தது. அப்போது ராஜீவ் மீது கடுமையான ஊழல் குற்றச் சாட்டுகளை தொடர்ந்து சுமத்தி பேசி வந்தார். ராஜீவ் காந்தி, இவரை 'குரைக்கும் நாய்' என்று சொன்னார். அதற்கு ஜெத்மலானி 'ஆம், நான் குறைக்கும் நாய்தான். திருடர்களை பார்த்து குரைக்கும் நாய்' என்று காட்டமாக பதில் அளித்தார்.

பல்வேறு சர்ச்சைகளுக்கும் அடாவடிக்கும் சொந்தகரரரான இவர் எக்கட்சியிலும் நிரந்தரமாக இல்லை. சொந்த கட்சிக்காரர்கள் தவறு செய்திருந்தால் அதை தைரியமாக தட்டி கேட்ககூடிய நேர்மையான மனோநிலை கொண்டவர். அனைத்து அரசியல் கட்சி தலைவர்களிடமும் நெருக்கமான நட்புறவை வளர்த்துக் கொண்டவர். சிவசேனை கட்சியின் சார்பாகவும் பா .ஜ.க சார்பாகவும் கடைசியாக ஐக்கிய ஜனதாதளத்தின் சார்பாகவும் ராஜ்யசபை உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

தனது வக்கீல் தொழிலில் தானே ராஜா என்பதனை நிருபிக்க பலமுறை சிக்கலான சர்ச்சைக்கிடமான வழக்குகளில் எதிர்தரப்பு வழக்கறிஞராக பங்கேற்று தனது வாத திறமையால் வழக்கை ஒன்றுமில்லாமல் போக செய்துள்ளார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலை வழக்கிலும், ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் ஆதரவாக வாதாடியுள்ளார்.